வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 22 of 2023

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சந்தியா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | தினேஷ்குமார் | தொழில் | : | Beauty Parlor |
| கிராமம் | : | லட்சுமி மில்ஸ் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.05.2023.

(எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 25.05.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு பொங்கலூர் PVKN பள்ளி அருகில் Beauty Parlor கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் தினமும் எனக்கு சொந்தமான TN 42 P4523 என்ற Activa இரு சக்கர வாகனத்தில் காலை 10.00 மணிக்கு சென்று மாலையில் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வருவேன். கடந்த 17.06.2022 ம் தேதி இரவு 8.40 மணிக்கு வேலையை முடித்துவிட்டு நான் எனது இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதற்காக திருச்சி–கோவை ரோட்டில் பொங்கலூர் அருகில் லட்சுமி மில்ஸ் நோக்கி சென்று கொண்டிருந்தபோது மாதப்பூர் கருப்புராயன் கோவில் அருகில் வரும்போது மணி இரவு 9.00 இருக்கும் அப்போது என் பக்கத்தில் யாரோ இரு சக்கர வாகனத்தில் வருவது போல் இருந்தது. நான் எனது வண்டியை மெதுவாக செல்லும்போது, பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த இருவரில் இரு சக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து கொண்டு வந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தாலிக்கொடியை பறித்துவிட்டார்கள். இரவு என்பதால் அப்போது அங்கு யாரும் இல்லை. நான் எனது வீட்டிற்கு தகவல் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

2. பிறகு மறுநாள் காலை 10.00 மணிக்கு பல்லடம் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்த புகார் தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் 23.07.2022 ம் தேதிநான் வீட்டில் இருந்தபோது பல்லடம் போலீசார் எனக்கு போன் செய்து நகையை கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் பல்லடம் காவல் நிலையம் சென்று எனது நகையை அடையாளம் காண்பித்தேன். அப்போது எனது நகையை பறித்த நபர்கள் அங்கு இருந்தார்கள். அவர்களையும் அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரிகள் தான் எனது நகையை பறித்து சென்றவர்கள் ஆவார்கள். பிறகு நீதிமன்றதில் ஒப்படைக்கப்பட்ட தாலிக்கொடியை மனுதாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தாலிக்கொடியை தான் பெற்றுச்சென்றேன். அந்த புகைப்படம் **அ.சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

3. நான் B.Com வரை படித்துள்ளேன். என்னிடம் வழிப்பறி செய்யப்பட்ட நகை என்னுடையது தான் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது புகாரில் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய எதிரிகள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் புகார் கொடுத்த தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் என்பது அதிகப்படியான போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 20 அடி தூரத்தில்கீதா பேக்கதிரி போன்ற கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

4. சம்பவமானது ரோட்டின் இடது புறம் நடந்தது என்றாலும், கீதா பேக்கரி ரோட்டின் இடது புறத்தில் உள்ளது என்றாலும் சரிதான். சம்பவம் நடந்தவுடன் அருகில் இருந்த நபர்களிடம் நான் உதவி கேட்கவில்லை என்றால் அருகில்

யாரும் இல்லை அதனால் உதவி கேட்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து அலைபேசி மூலம் அவசர உதவி எண்களுக்கு தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து எனது வீட்டிற்கு சுமார் 10 கி.மீ தூரம் ஆகும். மேற்படி இடைப்பட்ட தூரத்தில் இரண்டு போலீஸ் செக்போஸ்டுகளும், காவல் நிலையமும் உள்ளது என்றாலும், நான் அவர்களிடம் உதவி கோராமல் நான் நேரடியாக வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் சரிதான்.

5. நான் வீட்டிற்கு சென்றுசென்றபோது மணி இரவு 9.45 மணி இருக்கும். இரவு நேரமாகிவிட்டதால் காலையில் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். மறுநாள் காலை 10.00 மணியளவில் தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்னிட்டு ஒரு மாதம் கழித்து நான் காவல் நிலையத்திற்கு வந்தேன். எனது புகாரில் வழிப்பறி செய்த நபர்கள் வலது கையால் பறித்தார்களா, இடது கையால் பறித்தார்களா என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வந்த வாகனத்தின் விபரங்கள், பதிவு எண், நிறங்கள் ஆகியவற்றை சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடமிருந்து வழிப்பறி செய்தபோது எனது தாலிக்கொடி அறுந்துவிட்டது. நீதிமன்றத்திலிருந்து மனு செய்து பெற்றக்கொண்ட தாலிக்கொடியில் அறுந்த மாதிரி எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். எனது புகாரில் எதிரிகள் கண் மட்டும் தெரியும்படியும், முகம் முழுவதையும் முடி இருந்தார்கள் என்பதில் எந்த வகையான துணி மற்றும் நிறமுடைய துணியை முடியிருந்தார்கள் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அணிந்திருந்த ஆடைகளின் விபரங்களை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. ஆஜர் எதிரிகள் இந்த வழக்கில் வழிப்பறி செய்த நபர்கள் என்று போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. நான் தான் காவல் நிலையத்தில் பார்த்து அடையாளம் காட்டினேன். காவல் நிலையத்தில் நான்

எதிரிகளை பார்த்தபோது எதிரிகள் என்ன ஆடைகள் அணிந்திருந்தார்கள் என்றால் அவர்கள் சாதரணமான உடையில் அங்கு இருந்தார்கள். முகங்கள் எதுவும் முடப்படவில்லை. எனது புகாரில் எதிரிகளின் கண்களை மட்டும் பார்த்ததாக கூறியுள்ளதில் எதை வைத்து ஆஜர் எதிரிகள் தான் குற்றவாளி என்று நான் அடையாளம் காட்டினேன் என்றால் அன்றைய தினம் கண்களை மட்டும் காண்பிக்குமாறு துணிகளை வைத்து மறைத்து பார்த்ததில் வழிப்பறியில் ஈடுபட்ட நபர்களை போன்று ஆஜர் எதிரிகள் இருந்ததால் நான் அவர்களை எதிரிகள் என்று அடையாளம் காட்டினேன்.

8. மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழிப்பறி சம்பவமானது சுமார் 10 நொடிகளில் நடந்து முடிந்துவிட்டது. சம்பவஇடமானது இருட்டான பகுதி என்றாலும், தெரு விளக்குகள் எதுவும் இல்லாத பகுதி என்றாலும் சரிதான். அவ்வாறு இருட்டான பகுதியில் கண்களை நான் பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பின்னால் வாகனங்கள் வந்து கொண்டிருந்தது. அந்த வாகனங்களின் வெளிச்சத்தில் நான் கண்களை பார்த்தேன். சம்பவத்தின் போது வழிப்பறி செய்த நபர்கள் எனக்கு வலது புறத்தில் எனக்கு சரிசமமாக வந்து கொண்டிருந்தார்கள். எனக்கு பின்னாலும் நிற்கவில்லை, முன்னாலும் நிற்கவில்லை.

9. எனக்கு வலது புறத்தில் இருந்த நபர்களின் பின் பகுதியில் தான் பின்னால் வந்த வாகனங்களின் வெளிச்சம் பட்டு இருக்கும் என்றாலும், அவர்களின் கண்களில் வெளிச்சம் பட வாய்ப்பு இல்லை என்றாலும் சரிதான். போலீசார் விசாரணையில் வழிப்பறி செய்த நபர்களின் கண்களின் விபரங்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடமிருந்து வழிப்பறி செய்த போது எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக தங்க நகையினை கழுத்திலிருந்து இழுத்தால்காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடமானது நான் தினசரி சென்று வரும் பகுதி என்றும், நான்

தினசரி அந்த நேரத்தில்சென்று வருவேன் என்பதும் எனது நெருங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது வழிப்பறி செய்த நபர்கள் தலைகவசம் அணிந்திருக்கவில்லை. சம்பவத்தின்போது நான் தலைகவசம் அணிந்திருக்கவில்லை. சம்பவத்தின்போது எனது வாகனத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் ஆஜர் எதிரிகளை அடையாளம் காட்டியபோது யார் வாகனத்தை ஓட்டி நபர் என்றும், யார் பின்னார் உட்கார்ந்து வந்த நபர் என்றும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் பெயர்களை போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையினை 2ம் எதிரி ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டதால் அவ்வாறே முடித்துவைக்கப்படுகிறது).

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.05.25 20:45:40 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்